

திருவெறும்பூர் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட சின்ன சூரியூரில் துணை முதல்வரின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் கங்காதரன் தலைமை வைத்தார். அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமை கழக பேச்சாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி, ரம்யா பேகம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### CSR நிதியில் ரூ.116 கோடி வரை முடக்கி வைத்திருக்கும்

# துறைமுகங்களால் கடலோர மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது!

## நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, டிச.7-

ஒன்றிய அரசின் ‘சாகர் சாமஜிக் சஹயோக்’ திட்டத்தில் தேக்கம் CSR நிதியில் 116 கோடி ரூபாய் வரை முடக்கி வைத்திருக்கும் துறைமுகங்கள் இது கடலோர மக்களுக்கு இழைக்கப்படும் அநீதி என எம்.பி. கே.இ. பிரகாஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் கே.இ. பிரகாஷ் எழுப்பிய கேள்வியின் மூலம், நாட்டின் முக்கியத் துறைமுகங்கள் தங்களின் CSR நிதியை கடலோர மக்களின் முன்னேற்றத்திற்கு செலவு செய்யும் ‘Sagar Samajik Sahayog’ திட்டம் தேக்கம் அடைந்திருப்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

பல துறைமுகங்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 78%, 80%, 52% வரை பயன்படுத்தப்படாமல் நிதியை முடக்கி வைத்திருக்கின்றன. மேலும், இதுவரை திட்டத்தின் பலனை அறிய எந்தவிதமான



மதிப்பீடும் (Impact Assessment), ஆய்வும் (Review) செய்யப்படவில்லை. இது மீனவர் சமுதாயம் உள்ளிட்ட கடலோர மக்களின் நலனில் ஒன்றிய அரசு கொண்டுள்ள அலட்சியத்தையே காட்டுகிறது.

மக்களவையில் கே.இ. பிரகாஷ் எழுப்பிய கேள்விகள் வருமாறு:

a. ஒன்றிய அரசின் Sagar Samajik Sahayog வழிகாட்டு நெறிமுறைகள் அனைத்து முக்கியத் துறைமுகங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளதா?

b. இந்த வழிகாட்டுதல்கள் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து துறைமுகம் வாரியாக மேற்கொள்ளப்பட்ட முன்முயற்சிகள் மற்றும் முயற்சிகளின் விவரங்கள் என்ன?

c. இந்தக் காலகட்டத்தில் ஒவ்வொரு பெரிய துறை முகத்தாலும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்ட மொத்தச் சமூகப் பொறுப்பு நிதி எவ்வளவு?

d. ‘Sagar Samajik Sahayog’ வழிகாட்டுதல்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு ஏதேனும் மதிப்பீடு அல்லது ஆய்வு நடத்தப்பட்டுள்ளதா?

e. அவ்வாறு நடத்தப்பட்டிருந்தால், அந்த மதிப்பீடுகளின் விவரங்கள் மற்றும் முக்கிய கண்டுபிடிப்புகள் என்ன? அதன் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

**1. நிதியை முழுமையாக பயன்படுத்தாமல் இருப்பது கடலோர மக்களுக்கு இழைக்கும் அநீதி:**

இந்த திட்டத்தில், 2023-ஆம் ஆண்டிலிருந்து ஒதுக்கப்பட்ட மொத்த நிதியில் சுமார் ரூ.116 கோடிக்கு மேல் பயன்படுத்தாமல் துறைமுகங்கள் முடக்கி வைத்துள்ளன. இது நியாயமாக, கடலோர மக்களின் கல்வி, சுகாதாரம், வாழ்வு மேம்பாட்டுக்காக பயன்பட வேண்டிய நிதி.

ஆனால், இவ்வளவு நிதியை எந்தவொரு காரணத்தையும் சொல்லாமல், துறைமுகங்கள் முடக்கி வைத்திருப்பது, கடலோர மக்களுக்கு இழைக்கும் அநீதி.

**2. மோசமாக செயல்படும் துறைமுகங்கள் மீது என்ன நடவடிக்கை?**

ஒன்றிய அரசு அளித்துள்ள பதில்களின் படி, விசாகப்பட்டினம் துறைமுகம் ஒதுக்கப்பட்ட நிதியில் 22% மட்டுமே பயன்படுத்தியுள்ளது. மும்பை துறைமுகம்: ஒதுக்கப்பட்ட நிதியில் சுமார் 20% பயன்படுத்தியுள்ளது. மிக அதிக அளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கும் தீன்தயாள் துறைமுகம் 52% நிதியை மட்டுமே பயன்படுத்தியுள்ளது.

இது ஏற்றுக்கொள்ளவே முடியாதது. எத்தனை சமாதானங்களின் மூலமும், இவ்வளவு சதவிகித நிதி முடக்கத்தை நியாயப்படுத்த முடியாது.

இந்த நிதிக்கு உரிமை கொண்ட கடலோர மக்களின் கேள்வி ஒன்றே. இந்த துறைமுக நிர்வாகங்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது ஒன்றிய அரசு?

**3. நிறைவேற்றப்பட்ட பணிகள் குறித்து எந்த தகவலும் இல்லை!**

இந்த திட்டத்தில் துறைமுகங்கள் கடலோர மக்களுக்காக நிறைவேற்றியதாக சொல்லும் பணிகளைப் பற்றி, மதிப்பீடு (Impact Assessment) அல்லது ஆய்வு (Review) என்று எது குறித்த தகவல்களும் ஒன்றிய அரசு வழங்கவில்லை.

ஒவ்வொரு துறைமுகத்திலும் திட்டத்தின் பணிகளை கண்காணிக்க ஒரு CSR குழு உள்ளது என்று மட்டும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. ஆனால், வந்துள்ள பதிலின் படி, இந்தக் குழு செலவு செய்யும் நிதிக்கணக்கை மட்டும் கணக்கிடும் Audit வேலையை மட்டுமே பார்க்கிறது.

இந்த திட்டத்தின் விதிகளின் படி, CSR நிதியில் இருந்து 2% நிதியை நிறைவேற்றப்படும் பணிகளைக் கண்காணிக்க பயன்படுத்த வேண்டும். ஆனால், இந்த 2% நிதி இப்போது என்ன ஆகிறது? ஏன் பணிகளைக் கண்காணிப்பதில்லை?

**4. சென்னை காமராஜர் துறைமுகம் பற்றிய தகவல் இல்லை:**

நாட்டின் அனைத்து பெரிய துறைமுகங்களும் ‘சாகர் சாமஜிக் சஹயோக்’ வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றும் நிலையில், சென்னை காமராஜர் துறைமுகம் மட்டும் கார்ப்பரேட் விவகாரங்கள் துறையின் (Ministry of Corporate Affairs) வழிகாட்டுதல்களைப் பின்பற்றுகிறது. இதன் பின்னால் இருக்கும், நிர்வாகக் காரணங்களை புரிந்துகொள்ள முடிகிறது.

ஆனால், ‘சாகர் சமாக் சஹயோக்’ என ஒரு முன்னெடுப்பை நாடு தழுவிய அளவில் அறிவிக்கும் போது, அதில் தென்னிந்தியாவின் மிகமுக்கிய ஒரு துறைமுகத்தை உள்ளடக்காததன் அர்த்தம் என்ன?

ஒன்றிய அரசு இந்த திட்டத்தில் உள்ள நிதி முடக்கம், பணிகள் குறித்து தகவல் வழங்காதது, மதிப்பீடு செய்யாதது, காமராஜர் துறைமுகத்தை உள்ளடக்காதது ஆகியவற்றை சரி செய்து, கடலோர மக்களின் மேம்பாட்டிற்கு முழுப்பலனும் கிடைக்கும் வகையில் வழி செய்ய வேண்டும் என கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால் அவர்களின் பதில்:

(அ) காமராஜர் துறைமுகத்தைத் தவிர மற்ற அனைத்து முக்கியத் துறைமுகங்களிலும் வழிகாட்டுதல்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) & (இ) 2023 ஆம் ஆண்டு முதல் ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதிகள் குறித்த விவரங்கள் பின்னிணைப்பு-I-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஈ) & (உ) திட்டங்களின் திட்டமிடல், செயல்படுத்தல் மற்றும் கண்காணிப்பைக் கவனிக்க ஒவ்வொரு துறைமுகத்திலும் ஒரு சமூகப் பொறுப்புக் குழு (CSR Committee) அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

### முதலமைச்சர் நல்லாட்சியில், குன்னம் வரலாற்றில் மேலும் ஒரு மைல்கல்

# குன்னத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய மின்பகிர்மானக் கோட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பெருமிதம்!

பெரம்பலூர், டிச, 8 -

பெரம்பலூர் மாவட்டம்,குன்னத்தில் போக்குவரத்து மற்றும் மின்சா ரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், குன்னத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய மின்ப கிர்மான கோட்டத்தையும், செயற்பொறியாளர் அலுவலகத்தையும் இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ந.மிருணாளினி தலைமையில் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

இதில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கையின் அடிப்படையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் பயன் தரும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குன்னத்தில் புதிய பேருந்து பணிமனை, குன்னம் தொழில்நுட்பக் கல்லூரி, மகளிர் விடியல்



பேருந்துகள், காரை தொல்லுயிர் பூங்கா என நமது குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு முதலமைச்சர் அவர்கள் எண்ணற்ற திட்டங்களை வழங்கியுள்ளார்கள்.

அந்த வரிசையில் குன்னம் வரலாற்றில் மேலும் ஒரு மைல்கல்லாக இன்று குன்னத்தை தலைமையிடமாகக் கொண்டு மின் பகிர்மான வட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் மின் நுகர்வோர்களின் குறைகளை உடனுக்குடன், நிவர்த்தி செய்யவும், தடையில்லா தரமான மின்சாரத்தை வழங்கிடவும், ஒரே கோட்டமாக செயல்பட்டு வந்த பெரம்பலூர் கோட்டம், இரண்டாகப் பிரிக்கப்பட்டு புதிய குன்னம் கோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய கோட்டத்தில் லப்பைக்குடிக்காடு, குன்னம் மற்றும் சிறுவாச்சூர் ஆகிய பகுதிகளின் உதவி செயற்பொறியாளர்கள், பொறியாளர்கள் உள்ளடக்கிய உப கோட்டங்கள் மற்றும் லப்பைக்குடிக்காடு, வாலிகண்டபுரம், சின்னாறு அணை, வ.களத்தூர், வேப்பூர், மருதையான் கோவில், துங்கபுரம், சிறுவாச்சூர், பாடாலூர், கொளக்காநத்தம், செட்டிக்குளம் ஆகிய 11 பிரிவு அலுவலகங்களை உள்ளடக்கியதாக செயல்படும். மேலும் 10 எண்ணிக்கையிலான துணை மின் நிலையங்கள் குன்னம் கோட்டத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும்.

இது வரையில், குன்னம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதியில் உள்ள மின் நுகர்வோர்கள், மின்சாரம் தொடர்பான தங்களது கோரிக்கைகளை பெரம்பலூரில் உள்ள செயற்பொறியாளரை அணுகி நிவர்த்தி செய்து வந்தார்கள், தற்போது புதிய கோட்ட அலுவலகம் குன்னத்திலேயே துவக்கப்பட்டதால் மின்சாரம் சார்ந்த கோரிக்கைகளை இனி இங்கேயே வழங்கலாம்.

குன்னத்தில் கோட்ட அலுவலகம் திறக்கப்பட்டதால் 1,40,399 மின் நுகர்வோர்கள் தங்களது மின்சாரம் தொடர்பான கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றிக் கொள்ளவும், மின் நுகர்வோர்களுக்கு தரமான தடையில்லா மின்சாரத்தினை விரைந்து அளித்திடவும், சிறந்த நுகர்வோர் சேவை வழங்கிடவும் வசதியாக இருக்கும்.

மக்களின் தேவைகளை அறிந்து திட்டங்களை வழங்கிவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மக்கள் அனைவரும் என்றும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாவட்ட வருவாய் அலுவலர் க.கண்ணன், ஆலத்தூர் முன்னாள் ஒன்றியக்குழுத் தலைவர் ந.கிருஷ்ணமூர்த்தி, வேப்பூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் சி.இராஜேந்திரன், திருச்சி மின் பகிர்மான தலைமை பொறியாளர் எம்.கீதா, மேற்பார்வை பொறியாளர்கள் மேகலா, செந்தாமரைச்செல்வி, செயற்பொறியாளர்கள் பரமேஸ்வரி, முருகானந்தம், அசோக்குமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### “ஆஃப்டர் நூன்” – ‘பிற்பகல்’ நாளிதழ்களின் ஆசிரியர்

# எம்.என்.சுதன் அப்பாதுரை மறைவு!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச.7-

**“ஆஃப்டர் நூன்” மற்றும் ‘பிற்பகல்’ ஆகிய இதழ்களின் ஆசிரியர் எம்.என்.சுதன் அப்பாதுரை அவர்கள் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில்,


“கோவை பத்திரிகையாளர்கள் சங்கத் தலைவரும் – “ ‘Afternoon’ மற்றும் ‘பிற்பகல்’ ஆகிய நாளிதழ்களின் ஆசிரியர் மற்றும் பதிப்பாளருமான எம்.என்.சுதன் அப்பாதுரை அவர்கள் இயற்கை எய்தினார் எனும் செய்தி அறிந்து வருந்துகிறேன்.

சுதன் அப்பாதுரை அவர்கள் பத்திரிகைத் துறையில் நீண்ட நெடிய அனுபவம் கொண்டவர். அவரது மறைவு பத்திரிக்கை உலகிற்கு ஓர் இழப்பு எனின் அது மிகையல்ல.

அன்னாரை இழந்து துயருறும் – அவரது புதல்வர்கள் ஆதம் அப்பாதுரை. டேவிட் அப்பாதுரை உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கும். நண்பர்களுக்கும். உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும். ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.



கழக இளைஞரணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு மாநகரம் 27 வது வட்ட மாமன்ற உறுப்பினர் ஜெயந்தியிடம் கல்லூரி மாணவி சுருதி கேட்டுக் கொண்டதற்கிணங்க கோட்டை பகுதி கழக செயலாளர் பொ.இராமச்சந்திரன் ஏற்பாட்டில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி மாணவி சுருதிக்கு மடிக்கணினி வழங்கினார். அப்போது சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கோட்டை பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் இரா.அரவிந்த், மாணவரணி துணை அமைப்பாளர் முகமது மீரான் ஆகியோர் உடன் இருந்தனர்.



மயிலாடுதுறை நகர திமுக சார்பில் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் நினைவு நாளை முன்னிட்டு அண்ணா பகுத்தறி மன்றத்தில் வைக்கப்பட்ட டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் திருஉருவப் படத்திற்கு அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடல், மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம் முருகன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்ட கழக துணை செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, நகர கழக செயலாளர் குண்டாமணி (எ) என், செல்வராஜ் ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், அமிர்த,விஜயகுமார் பஞ்சு.குமார், கு.வைத்தியநாதன், செல்லசேது.ரவிக்குமார், ப.முருகமணி, பொதுக்குழு உறுப்பினர் பி.சிவதாஸ் நகர நிர்வாகிகள் ஆர்.கே.சங்கர், வை.தெய்வநாயகம் உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்




சேலம் கிழக்கு மாவட்ட
விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில்

இளந்தலைவர்
பிறந்தநாள் விழா

2026-ல் 7-வது முறையாக கழக
ஆட்சி அமைய உள்ளதை
முரசொலி -க்கும் விதமாக

26 விளையாட்டு போட்டிகள்

மாண்புமிகு. எ.வ.வேலு
பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்

உயர்திரு. தயாநிதிமாறன் MP

அவர்களின் வாழ்த்துக்களுடன்

மாண்புமிகு. இரா.ராஜேந்திரன்
சுற்றுலாத்துறை அமைச்சர், சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர்

உயர்திரு. எஸ்.ஆர்.சிவலிங்கம் MP
மாநிலங்களவை உறுப்பினர், சேலம் கிழக்கு மாவட்ட கழக செயலாளர்

உயர்திரு. T.M.செல்வகணபதி MP
சேலம் நாடாளுமன்ற உறுப்பினர், சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர்

உயர்திரு. தே.மலையரசன் MP
கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர்

திரு. S.கார்த்தி மாநில துணைச்செயலாளர், விளையாட்டு மேம்பாட்டு அணி (மண்டலம் -IV பொறுப்பாளர்)

அவர்களின் தலைமையில்

மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய / நகர / பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் முன்னிலையிலும்,

சேலம் கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள்.ஒன்றிய / நகர / பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஒருங்கிணைப்பிலும்

சிறப்பாக நடைபெற உள்ளது.

| வ. எண் | நாள் | விளையாட்டு போட்டிகள் | இடம் / ஏற்பாடு |
|---|---|---|---|
| 1. | 13.12.2025 | வாலிபால் போட்டி | கெங்கவல்லி ஒன்றியம் / ஒ.வி.மே.அணி |
| 2. | 13.12.2025 | மாவட்ட அளவிலான சதுரங்கம் | வீரபாண்டி ஒன்றியம் (தெ) / மா.வி.மே.அணி |
| 3. | 20.12.2025 | கபடி போட்டி | தலைவாசல் வடக்கு ஒன்றியம் / வி.மே.அணி |
| 4. | 20.01.2026 | யோகமாரத்தான் போட்டி | கெங்கவல்லி பேரூர் / மா.வி.மே.அணி |
| 5. | 21.12.2025 | கிரிக்கெட் போட்டி | வீரபாண்டி ஒன்றியம் (வ) / ஒ.வி.மே.அணி |
| 6. | 21.12.2025 | வாலிபால் போட்டி | பனமரத்துப்பட்டி பேரூர் / பேரூர் வி.மே.அணி |
| 7. | 25.12.2025 | கிரிக்கெட் போட்டி | பெத்தநாயக்கன்பாளையம் (ம) / ஒ.வி.மே.அ. |
| 8. | 26.12.2025 | கபடி போட்டி | நரசிங்கபுரம் நகரம் / நகர வி.மே.அணி |
| 9. | 27.12.2025 | இறகுபந்து போட்டி | வாழப்பாடி வடக்கு ஒன்றியம் / ஒ வி.மே.அணி |
| 10. | 28.12.2025 | வாலிபால் போட்டி | அயோத்தியாபட்டினம் வடக்கு / ஒ.வி.மே.அணி |
| 11. | 28.12.2025 | கிரிக்கெட் போட்டி | வாழப்பாடி பேரூர் / பேரூர் வி.மே.அணி |
| 12. | 28.12.2025 | கிரிக்கெட் போட்டி | பெத்தநாயக்கன்பாளையம் பேரூர் / பே.வி.அ. |
| 13. | 28.12.2025 | கிரிக்கெட் போட்டி | தம்மம்பட்டி பேரூர் / பேரூர் வி.மே.அணி |
| 14. | 03.01.2026 | கபடி போட்டி | இளம்பிள்ளை பேரூர் / பேரூர் வி.மே.அணி |
| 15. | 04.01.2026 | கிரிக்கெட் போட்டி | பெத்தநாயக்கன்பாளையம் (தெ) / ஒ.வி.மே.அ. |
| 16. | 04.01.2026 | கபடி போட்டி | தலைவாசல் மத்தியம் ஒன்றியம் / ஒ வி.மே.அ. |
| 17. | 04.01.2026 | கபடி போட்டி | வாழப்பாடி தெற்கு மாவட்ட வி.மே.அணி |
| 18. | 04.1.2026 | கபடி போட்டி | ஆத்தூர் நகரம் / நகர விளையாட்டு மே.அணி |
| 19. | 05.01.2026 | வாலிபால் போட்டி | ஏற்காடு ஒன்றியம் / ஒன்றிய வி.மே.அணி |
| 20. | 10.01.2026 | கிரிக்கெட் போட்டி | வீரகனூர் பேரூர் / பேரூர் வி.மே.அணி |
| 21. | 10.01.2026 | தடகள போட்டி (மாற்று திறனாளிகள்) | வீரபாண்டி ஒன்றியம் (தெ) / மா.வி.மே.அணி |
| 22. | 10.01.2026 | கபடி போட்டி | தலைவாசல் தெற்கு மாவட்ட வி.மே.அ. |
| 23. | 11.01.2026 | வாலிபால் போட்டி | பனமரத்துப்பட்டி ஒன்றியம் / ஒ.வி.மே.அணி |
| 24. | 11.01.2026 | கபடி போட்டி | அயோத்தியாபட்டினம் தெற்கு / ஒ.வி.மே.அணி |
| 25. | 21.12.2025 | கபடி போட்டி | ஆட்டையாம்பட்டி பேரூர் / பேரூர் வி.மே.அணி |
| 26. | 10.01.206 | கிரிக்கெட் போட்டி | பெத்தநாயக்கன்பாளையம் (வ) / ஒ.வி.மே.அ. |

என்றும் கழக தலைவர், இளந்தலைவர் அவர்கள் வழியில்

பிரண்ட்ஸ் T.ரமேஷ்
மாவட்ட அமைப்பாளர்,
சேலம் கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி
தொகுதி மேற்பார்வையாளர் ஊத்தங்கரை (தனி) சட்டமன்ற தொகுதி

விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் – சேலம் கிழக்கு மாவட்டம்

இரா.இலட்சுமண பெருமாள் ஏற்காடு.வெ.ரமேஷ் பாபு முனைவர்.கெ.சு.தங்கபாண்டியன்
ஆவின்.தி.செல்வமணி ப.விஜயகுமார் செல்வக்குமார் எம்.ஆர்.கிருஷ்ணவேணி
இரா.மதியழகன் மோ.கிருஷ்ணகுமார்




புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளையொட்டி, அவரது திருவுருவப் படத்திற்கு திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மலர்தூவி மரியாதை செலுத்தி வணங்கினார்.



கிருஷ்ணகிரியில் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கர் நினைவு நாள் விழாவில், 1,578 பயனாளிகளுக்கு ரூ.8 கோடியே 44 இலட்சத்து 91 ஆயிரத்து 953 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் , மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் வழங்கினர். இதில் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார திட்ட அலுவலர் பெரியசாமி, கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், உள்ளிட்ட பலர் உள்ளனர். மாநில விவசாய அணி துணை செயலாளர் வெங்கடேசன் , மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி , சாவித்திரி, பொருளாளர் கதிரவன், பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன் , சித்ரா சந்திரசேகர் முன்னாள் ஒன்றிய குழு தலைவர் ஸ்ரீனிவாசலு ரெட்டி, கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம் , வேல்மணி, மாவட்ட செய்தி தொடர்பாளர் சீனிவாசன் உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் .



புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு தெற்கு வடக்கு ஒன்றிய கழக செயலாளர்கள் மங்களா கோவில் எம்.பரமசிவம், கோமாபுரம் மா.தமிழ் அய்யா ஆகியோர் தலைமையில் கந்தர்வகோட்டையில் இளைஞர் அணி சார்பாக அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட மகளிர் அணி தவசுமணி, மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ராஜா, துணை அமைப்பாளர் ஜானகிராமன், ஒன்றிய கவுன்சிலர் நியூஸ் ராஜேந்திரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.கலையரசன், துணை அமைப்பாளர்கள் பிரகாஷ், சுரேஷ் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் முதுகுளம் பாலு, அரவம்பட்டி முத்துக்குமார், தாமரை, பழனிவேல், ராஜேந்திரன், அவைத் தலைவர் சுப்பிரமணியன், முருகேசன், நெப்புகை சரவணன் , வேலுமயில், அம்பிகாபதி, ராமராஜ் மற்றும் தெற்கு வடக்கு ஒன்றிய அனைத்து அணி நிர்வாகிகளும் தொண்டர்களும் திரளாக கலந்து கொண்டனர்.